"தமிழ் எங்கள் உயிருக்கு நேர்"

# தமிழ்க் கல்விச்சேவை சுவிற்சர்லாந்து

# தமிழ்மொழி

## ஆண்டு 3

| நேரம்: 90 நிமிடம் | சுட்டெண்: : |
|---|---|

# பொதுத்தேர்வு – 2020

## பகுதி 1

**1. பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**

1. எமது தாய்மொழி
(தமிழ்மொழி, ஆங்கிலமொழி, பிரெஞ்சுமொழி)

2. மாமா சிற்பம்
(வரைகிறார், மீட்டுகிறார், செதுக்குகிறார்)

3. எமது தாய்நாட்டில் விளையும் பொருட்களுள் ஒன்று
(தங்கம், முத்து, இரும்பு)

4. நேற்று வெள்ளிக்கிழமை நாளை
(சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை, வியாழக்கிழமை)

5. குழந்தைகளைத் தூங்கவைக்கப் பாடப்பெறுவது
(தொழிற்பாடல், தாலாட்டுப்பாடல், பக்திப்பாடல்)

6. 900 என்பதன் எழுத்து வடிவம்
(தொள்ளாயிரம், தொல்லாயிரம், தொழ்ழாயிரம்)

7. குயில் கூவும் அதுபோல காகம்
(கத்தும், கரையும், அகவும்)

8. எமது கையில் உள்ள இரண்டாவது விரல்
(பெருவிரல், சுட்டுவிரல், நடுவிரல்)

9. மனித ஆற்றலால் இயங்கும் போக்குவரத்துப்பொறி
(பேருந்து, சிற்றுந்து, மிதியுந்து)

10. பூங்கா நகரம் என அழைக்கப்பெறுவது
(பேர்ண், சூரிச், ஜெனீவா)

11. வீட்டைச் சுமந்தபடி வீதிப் பயணம் செய்பவர்
(ஆமை, பாம்பு, பல்லி)

12. ‘சின்னஞ் சிறுகிளியே கண்ணம்மா…’ என்ற பாடலைப் பாடியவர்
(பாரதியார், பாரதிதாசன், இரத்தினதுரை)

13. மா, பலா, வாழை என்பன
(முத்தமிழ், முக்கனி, முப்பால்)

14. தாச்சி விளையாட்டில் பங்குபெறும் குழுக்களின் எண்ணிக்கை
(மூன்று, இரண்டு, நான்கு)

15. ‘கற்பகதரு’ என அழைக்கப்பெறுவது
(தென்னை, பனை, கமுகு)

(15×1=15 புள்ளிகள்)

**2. ஒத்தபொருட்சொல் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| மனம் | கனி | தாய் | பூ |
| ஞாயிறு | வயல் | பாதை | மெய் |

1. அன்னை ________________ 5. உண்மை ________________
2. பழம் ________________ 6. மலர் ________________
3. கதிரவன் ________________ 7. கழனி ________________
4. உள்ளம் ________________ 8. வழி ________________

(8×1=8 புள்ளிகள்)

**3. எதிர்ப்பொருட்சொல் எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| இடம் | குளிர் | இல்லை | வேற்றுமை |
| மேலே | இன்பம் | இறப்பு | சிரி |

1. பிறப்பு ________________ 5. ஒற்றுமை ________________
2. அழு ________________ 6. உண்டு ________________
3. கீழே ________________ 7. சூடு ________________
4. வலம் ________________ 8. துன்பம் ________________

(8×1=8 புள்ளிகள்)

**4. பொருத்தமாக இணைத்துப் பழமொழிகளை நிறைவு செய்க.**

| | |
|---|---|
| 1. இளமையில் கல்வி • | • தூற்றிக் கொள் |
| 2. ஒன்றுபட்டால் • | • சிலையில் எழுத்து |
| 3. கல்விக்கு அழகு • | • ஐம்பதில் வளையுமா? |
| 4. ஐந்தில் வளையாதது • | • உண்டு வாழ்வு |
| 5. காற்றுள்ள போதே • | • கசடற மொழிதல் |



(5×1=5 புள்ளிகள்)

**5. அடைப்புக்குறிக்குள் உள்ள சொற்களைப் பொருத்தமாக வைத்து எழுதுக.**

1. பூனை ______________________ ப் பிடித்தது. (எலி + ஐ)
2. அம்மா ______________________ த் தைக்கிறார். (சட்டை + ஐ)
3. மகிழினி ______________________ வெட்டினாள். (நகம் + ஐ)
4. விண்மீன்கள் ______________________ தோன்றின. (வான் + இல்)
5. சேரன் ______________________ ஏறினான். (மலை + இல்)
6. சிங்கம் ______________________ வாழும். (காடு + இல்)

(6×1½=9 புள்ளிகள்)

**6. கீழ்க்காணும் சொற்களை ஒழுங்குபடுத்தி வாக்கியம் அமைக்குக.**

1. பள்ளிக்குச் / நிலவன் / சென்றான்

______________________________________________

2. பழத்தைக் / மைனா / கொத்தியது

______________________________________________

3. உண்மையைப் / நாம் / பேச / வேண்டும்

______________________________________________

4. இன்பம் / மழலைச் / தரும் / சொல்

______________________________________________

5. மலரும் / கோடை / பூக்கள் / காலத்தில்

______________________________________________

6. பனை / கிடைக்கிறது / நுங்கு / மரத்திலிருந்து

______________________________________________

(6X1½= 9புள்ளிகள்)

**7. எடுத்துக்காட்டைப் பார்த்து எழுதுக.**

**எ+கா: கீரி சண்டை செய்தது. பாம்பு சண்டை செய்தது.**

**கீரியும் பாம்பும் சண்டை செய்தன.**

1. யாழினி பாட்டுப் பாடினாள். சிவமதி பாட்டுப் பாடினாள்.

 ______________________________

2. மாமா புத்தகம் தந்தார். மாமா கொப்பி தந்தார்.

 ______________________________

3. மாமரத்தில் காய்கள் இருந்தன. மாமரத்தில் பழங்கள் இருந்தன.

 ______________________________

4. அண்ணா கடைக்குச் சென்றான். தம்பி கடைக்குச் சென்றான்.

 ______________________________

(4×2=8 புள்ளிகள்)

**8. கீழ்க்காணும் வினாக்களுக்கு விடை எழுதுக.**

1. ஜெனிவா நகருக்கு எல்லையாக அமைந்துள்ள நாடு எது?

 ______________________________

2. உலகப் பொதுமறை என்று அழைக்கப்பெறும் நூல் எது?

 ______________________________

3. ஐப்பசித் திங்களுக்கு அடுத்து வரும் திங்கள் எது?

 ______________________________

4. விளக்கேந்திய சீமாட்டி என மதிக்கப்பெறுபவர் யார்?

 ______________________________

5. விளையாட்டினால் ஏற்படும் நற்பண்புகள் எவை?

 ______________________________

6. வாய்மொழியாக வழங்கிவரும் பாடல்களை எவ்வாறு அழைப்பர்?

 ______________________________

7. ஓரெழுத்துச் சொற்கள் மூன்று தருக.

______________________________________________

8. பழங்களில் உள்ள சத்துகள் எவை?

______________________________________________

(8×1=8 புள்ளிகள்)

**9. எடுத்துக்காட்டைப் பார்த்து பொருத்தமாக எழுதுக.**

**எ+கா:** நாங்கள் மலையில் ____ஏறி____ச் சென்றோம். ( ஏறு )

1. மாணவர்கள் ____________ விளையாடினார்கள். ( ஓடு )
2. அம்மா உணவைச் ____________ முடித்தார். ( சமை )
3. பறவைகள் ____________ சென்றன. ( பற )
4. குழந்தை என்னைப் ____________ ச் சிரித்தது. ( பார் )
5. நான் நூலைத் ____________ எடுத்தேன். ( தேடு )
6. மரக்கிளை ____________ விழுந்தது. ( முறி )

(6×1½=9 புள்ளிகள்)

**10. கீழ்க்காணும் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவுசெய்து ஆறு வாக்கியங்கள் எழுதுக.**

1. திருக்குறள்    2. கிளி

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________



(6 புள்ளிகள்)

## பகுதி 2

**1. கீழ்க்காணும் பந்தியைப் படித்து வினாக்களுக்கு விடை எழுதுக.**

தமிழ்நாட்டில் வாழ்ந்த பெண் புலவர்களுள் ஔவையாரும் ஒருவர். ஒருநாள் அவர் நீண்டதூரம் நடந்து சென்ற களைப்பினால் ஒரு நாவல் மரத்தின் கீழ் அமர்ந்தார். அம்மரத்தில் ஒரு சிறுவன் நாவற் பழங்களைப் பறித்துத் தின்றுகொண்டிருந்தான். அதைக்கண்டு தனக்கும் பழங்கள் தரும்படி சிறுவனைக் கேட்டார். அதற்குச் சிறுவன் "சுட்டபழமா, சுடாதபழமா வேண்டும்?" எனக் கேட்டான். சுட்டபழம் தா என ஔவையார் கேட்க சிறுவன் ஒரு கிளையை அசைத்தான். நன்கு பழுத்த பழங்கள் நிலத்தில் விழுந்தன. பழங்களை எடுத்து மண்ணைப்போக்க ஔவையார் வாயால் ஊதினார். அப்போது சிறுவன் "என்ன பாட்டி பழங்கள் சுடுகின்றனவா" என்று கேட்டான். ஔவையார் சிறுவனின் திறமையை எண்ணி வியந்து பாடல் ஒன்றைப் பாடினார்.

1. பெண் புலவர்களுள் ஒருவர் யார்?

   ______________________________

2. அவர் எங்கு வாழ்ந்தார்?

   ______________________________

3. ஔவையார் எந்த மரத்தின் கீழ் அமர்ந்தார்?

   ______________________________

4. சுட்டபழம் என்றால் என்ன?

   ______________________________

5. சிறுவனின் திறமையை எண்ணி வியந்த ஔவையார் யாது செய்தார்?

   ______________________________

(5×1=5 புள்ளிகள்)

**2. எடுத்துக்காட்டைப் பார்த்து அட்டவணையில் புள்ளடி இடுக.**

| இல | வாக்கியம் | நேற்று | இன்று | நாளை |
|---|---|---|---|---|
| எ+கா: | **நாங்கள் பழங்கள் வாங்கினோம்.** | X | | |
| 1 | நான் மீன்கள் வளர்க்கிறேன். | | | |
| 2 | குமணன் வீணை மீட்டுவான். | | | |
| 3 | நீங்கள் பாடம் படித்தீர்கள். | | | |
| 4 | அக்கா கவிதை எழுதுவாள். | | | |
| 5 | காற்று வேகமாக வீசுகிறது. | | | |

(5×1=5 புள்ளிகள்)

## 3. பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்து கீறிட்ட இடங்களில் எழுதுக.




1. எமது உறவினர்கள் ________________________ வாழ்கிறார்கள்.
2. செவ்வந்திப்பூவில் வண்டுகள் ________________________ குடிக்கின்றன.
3. நான் வீட்டு வேலைகளை ________________________ என்று செய்தேன்.
4. பரீஸ் நகரில் ஈபிள் ________________________ உண்டு.
5. நண்பர்கள் ________________________ மகிழ்ந்தார்கள்.

(5×1=5 புள்ளிகள்)

| பணியகப் பயன்பாட்டிற்கு; | | | |
|---|---|---|---|
| விடைத்தாள் மதிப்பீடு | முழுப்பெயர் | கையொப்பம் | மொத்தப்புள்ளிகள் |
| முதலாம் முறை | | | |
| இரண்டாம் முறை | | | |
| இறுதிப்புள்ளிகள் | | | |